# வலைத்தள தனியுரிமை அறிவித்தல்

ஹலோ, உங்களை இங்கு சந்திப்பதில் மகிழ்ச்சி.

நீங்கள் வலைத்தளத்தில் உலவும்போது, டிஜிட்டல் தடம் ஒன்றை விட்டுச்செல்கின்றீர்கள். அதில் உங்கள் சாதனம் மற்றும் நீங்கள் அதனை ஒன்லைனில் பயன்படுத்தும் முறை பற்றிய தகவல்கள் இருக்கும்.

உங்களைப் பற்றிய இத் தகவல்கள் எம்மால் சேகரிக்கப்படும் என்பதை உங்களுக்கு அறிவிக்க நாம் விரும்புகின்றோம்.. அநேகமான வலைத்தளங்கள் அவ்வாறு செய்கின்றன.

வலைத்தளத்தை உங்களுக்கு வழங்க நாம் இத் தகவல்களைப் பயன்படுத்துகின்றோம். உங்களுக்கும் எமக்கும் உதவுமென நாம் கருதும் வேறு விடயங்களுக்கும் நாம் அவற்றைப் பயன்படுத்துவோம்.

இது பற்றி உங்களுக்கு விளக்கம் அளிப்பதற்காகவே நாம் இந்த அறிவித்தலை விடுக்கின்றோம். கவலைப்பட வேண்டாம். இதை வாசிப்பதற்கு ஏழெட்டு நிமிடங்கள் மட்டுமே எடுக்கும்.



# வலைத்தள தனியுரிமை அறிவித்தல்



“நாம்” என்று இங்கு கூறப்படுவது HSBC குழுமக் கம்பனிகளையும் எமக்குச் சேவை வழங்கும் எமது நம்பிக்கைக்குரிய பங்காளிகளையும் குறிக்கும்.

அத்தகைய பங்காளிகளுள் பின்வருவன உள்ளடங்கும்:


- தொழில்நுட்ப வழங்குநர்கள்
- இணையப் பாதுகாப்புக் கம்பனிகள்
- சமூக ஊடகப் பங்காளிகள்
- விளம்பர சேவைப் பங்காளிகள்

|PUBLIC|

# எமது தனியுரிமை அறிவித்தல்கள்


இது எமது வலைத்தள அறிவித்தல்.

எம்மிடம் வேறு அறிவித்தல்களும் உள்ளன. அவற்றில் சில உங்களுக்கும் பொருந்தலாம். நீங்கள் எவ்வாறு எம்முடன் தொடர்புகொள்ளத் தெரிவு செய்துள்ளீர்கள் என்பதில் அது தங்கியுள்ளது.




பூரண தனியுரிமை அறிவித்தல்: எமது பூரண தனியுரிமை அறிவித்தல், இந்த அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படுவதற்காக, மேலும் கூடுதலான தகவல்களைக் கொண்டுள்ளன. பொதுவாக, HSBC உங்கள் தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு பயன்படுத்தும் என்பதை அது விரிவாக எடுத்துக்கூறுகின்றது. அதனை நீங்கள் பின்வரும் வலைத்தளத்தில் வாசிக்கலாம்: https://www.hsbc.lk/privacy-and-security/


நீங்கள் இங்கு உள்ளீர்கள்



பகிரங்க வலைத்தள அறிவித்தல்: இந்த வலைத்தளத்தில் கடவுச்சொல் இல்லாமலே பார்க்கக்கூடிய (இப் பக்கம் போன்ற) பகுதிகளை இந்த அறிவித்தல் உள்ளடக்குகின்றது.



குக்கீ அறிவித்தல்: உங்கள் வலைத்தள உலாவியில் அல்லது மொபைல் சாதனத்தில் இருந்து நாம் எவ்வாறு தகவல்களைச் சேகரிக்கின்றோம் என்பதை இது எடுத்துக்கூறுகின்றது.




ஏனைய அறிவித்தல்கள்: எமது சில பிரயோகங்கள் (apps) அல்லது எமது வலைத்தளத்தின் சில பகுதிகள் தத்தமது சொந்தத் தனியுரிமை அறிவித்தல்களைக் கொண்டுள்ளன. உதாரணமாக, எமது மொபைல் appகளுக்குப் பிரத்தியேகமான தனியுரிமை அறிவித்தல்கள் உள்ளன. எமது வலைத்தளத்தின் hsbc.com/careers என்ற பிரிவும் அவ்வாறானதே.

வழமையாக, எமது அறிவித்தல்களை வலைத்தளத்தின் அடிக்குறிப்பில் நீங்கள் பார்க்கலாம். நீங்கள் ஒரு app ஐ பயன்படுத்துவதாக இருந்தால், அது வழமையாக தெரிவுப் பட்டியலில் இருக்கும். எமது பூரணமான தனியுரிமை அறிவித்தலே பிரதானமானது. அதனை https://www.hsbc.lk/privacy-and-security/ என்ற வலைத்தளத்தில் பார்க்கலாம்.

# இந்த வலைத்தளத்தினால் சேகரிக்கப்படும் தனிப்பட்ட தகவல்கள்

நீங்கள் எமது வலைத்தளத்தைப் பயன்படுத்தும்போது நாம் தகவல்களைச் சேகரிக்கின்றோம். நீங்கள் எமது சமூக ஊடகத் தளம் ஒன்றில் பிரவேசிக்கும்போதும் நாம் அவ்வாறு செய்கின்றோம்.

நீங்கள் எமது வலைத்தளத்தை அல்லது சமூக ஊடகத் தளத்தைப் பார்க்கும்போது, நாம் பின்வருவனவற்றைக் காண்போம்:



நீங்கள் கிளிக் செய்வது

உங்கள் நாடு அல்லது பிராந்தியம் (நாம் உங்கள் அனுமதியைக் கேட்டாலன்றி, சரியாக நீங்கள் இருக்கும் இடத்தை அல்ல)

நீங்கள் பார்வையிடுவது


உங்கள் உலாவிக்கு அல்லது சாதனத்திற்கு ஒதுக்கப்பட்ட உங்கள் தனித்துவ விளம்பரம் அல்லது வேறு அடையாள இலக்கங்கள்

பக்கங்களில் நீங்கள் செலவிட்ட நேரம்

உங்கள் சாதன மற்றும் இணையத்தள இணைப்பு விபரங்களை. உதா: நீங்கள் பயன்படுத்தும் சாதன வகை, IP முகவரி மற்றும் உங்கள் இணையத்தள இணைப்புப் பற்றிய விபரங்கள், உங்கள் திரையின் அளவு போன்ற தொழில்நுட்ப விபரங்கள், உங்கள் வலைத்தள உலாவி போன்ற நீங்கள் பயன்படுத்தும் மென்பொருள்.

இந்த வலைத்தளத்திற்கான இணைப்பு (link) ஒன்றை நீங்கள் பயன்படுத்தினால், நீங்கள் கடைசியாகப் பிரவேசித்த தளம் எதுவென்பதை நாம் அறிந்துகொள்வோம். மின்னஞ்சல் ஒன்றின் ஊடாகப் பெறப்பட்ட ஓர் இணைப்பைப் பின்பற்றியே நீங்கள் இந்த வலைத்தளத்தில் பிரவேசித்திருக்கக்கூடும். நாம் அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றை நீங்கள் திறந்தால், பின்வருவனவற்றை எம்மால் சொல்ல முடியும்:


- நீங்கள் அதனைத் திறந்துள்ளீர்கள் என்பதை
- மின்னஞ்சலிலுள்ள எந்த இணைப்புகளை (links) நீங்கள் கிளிக் செய்தீர்கள் என்பதை



நீங்கள் எமது வலைத்தளத்தில் ஒரு படிவத்தை நிரப்பும்போது, நீங்கள் என்ன டைப் செய்கிறீர்கள் என்பதை எம்மால் பார்க்க முடியும்.

நீங்கள் எமக்கு ஒரு செய்தியை அனுப்பினால், நீங்கள் தெரிவிக்கும் தகவல்களை நாம் சேகரிக்கக்கூடும்.


சில தரவுகள் பின்வரும் தரப்புக்களினால் சேகரிக்கப்படும்:



எமது பங்காளிகள்: இவை வலைத்தள உரித்தாளிகளாக அல்லது சமூக ஊடகத் தளங்களாக இருக்கலாம்.




இணையப் பாதுகாப்பு வடிகட்டல் தொழில்நுட்பம்: இது எமது வலைத்தளத்தை மோசடி மற்றும் குற்றச்செயல்களில் இருந்து பாதுகாக்கின்றது.




குக்கீஸ் மற்றும் அது போன்ற தொழில்நுட்பம்: இவை எம்மாலும் எமது நம்பிக்கைக்குரிய பங்காளிகளினாலும் உங்கள் சாதனத்தில் அமைக்கப்படுகின்றன.

சில சமயங்களில், இத் தரவுகள் மூலம் நீங்கள் யார் என்பதை சரியாக அறிந்துகொள்ள எமக்கு முடியாதிருக்கலாம். எனினும், நாம் இத் தரவுகளை உங்களைப் பற்றி எம்மிடமுள்ள வேறு தகவல்களுடன் தொடர்புபடுத்துவோம்.



உதாரணம்:

- நீங்கள் எமது வலைத்தளத்தில் உலாவிய பின்னர் ஒன்லைன் வங்கிச் சேவையைப் பயன்படுத்தினால், நாம் இத் தரவை உங்களுடன் தொடர்புபடுத்தக்கூடும். அடுத்த முறை நீங்கள் பிரவேசிக்கும்போது, நாம் அத் தரவை உங்களுடன் தொடர்புபடுத்த முடியும்.




- நீங்கள் சமூக ஊடக கணக்குகளில் நுழைந்திருக்கும் அதே வேளையில் எமது வலைத்தளத்தில் உலாவினால், எமது பங்காளிகள் இத் தரவை அக் கணக்குகளுடன் தொடர்புபடுத்த முடியும்.

உங்கள் உலாவல் தரவுகளை மூன்றாம் தரப்புக்களினால் வைத்திருக்கப்படும் தனிப்பட்ட தரப்புக்களுடன் தொடர்புபடுத்துதல் சாத்தியமாகலாம்.

எமது சட்டபூர்வமான அக்கறைகளுக்கு உட்படும் வேளைகளில் நாம் உங்கள் தரவுகளைப் பயன்படுத்துவோம்.


உங்கள் தரவுகளைப் பயன்படுத்துவதற்கு எம்மிடம் செல்லுபடியான மற்றும் சட்டபூர்வமான காரணம் இருப்பதோடு, அத் தரவுகள் உங்கள் நலன்களைச் சமப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.



# இத் தனிப்பட்ட தரவுகளை நாம் பயன்படுத்துவது எப்படி?

## வலைத்தளத்தை வழங்குவதற்கு

வலைத்தளத்தைச் இயக்குவதற்கும் அது எவ்வளவு சிறப்பாகச் செயற்படுகின்றது என்பதைக் கண்காணிப்பதற்கும் உங்கள் தகவல்களை நாம் பயன்படுத்துவோம். அநேகமான வலைத்தளங்கள் அவ்வாறு செய்கின்றன.



## எங்கள் வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு

நாம் உங்கள் தகவல்ளைப் பயன்படுத்துவது:

- நீங்கள் எமது சேவைகளைப் பயன்படுத்துவது எப்படியென்று விளங்கிக்கொள்ள
- வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் போக்குளைப் பார்வையிட
- சிறந்த இலக்குக் கொண்ட வழங்கல்கள் மற்றும் சேவைகளை விருத்திசெய்ய
- உங்களுக்கு அக்கறையுள்ளதாக இருக்கக்கூடிய வழங்கல்கள் மற்றும் சேவைகளைக் கண்டறிய
- உங்களுக்கான எமது சேவைகளை மேம்படுத்த
- எமது சந்தைப்படுத்தல் எவ்வளவு பயனுள்ளது என்பதை அறிந்து அதனை முன்னேற்ற

# பாதுகாப்பு

மோசடி மற்றும் குற்றச்செயல்களிலிருந்து உங்களையும் எங்களையும் பாதுகாப்பதற்காக உங்கள் தகவல்களை நாம் பயன்படுத்துகின்றோம். உதாரணம்: தீங்கிழைக்கும் நடவடிக்கைகளைத் தடுக்க உதவுவதற்காக எமது சேவை வழங்குநர்கள் எமது வலைத்தளத்தின் சகல பாவனைகளையும் கண்காணிக்கின்றனர். இது உங்களையும் எங்களையும் பாதுகாக்க உதவுகின்றது.

Google ReCaptcha என்பது எமது பாதுகாப்பு வழங்குநர்களில் ஒன்றாகும். இது Google Privacy Policy மற்றும் Terms of Use என்பவற்றிற்கு உட்பட்டது என்பதை உங்களுக்குக் கூறும்படி Google எம்மை கேட்கின்றது.




## எமது வலைத்தளத்தைப் பிரத்தியேகமாக்குதல்

நீங்கள் எமது வலைத்தளத்தில் பிரவேசிக்கும்போது, வலைத்தளம் உங்களைப் பிரதிபலிக்கச் செய்வதற்காக நாம் சேகரித்த தரவுகளை நாம் பயன்படுத்தக்கூடும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

- எமது வலைத்தள உள்ளடக்கத்தையும் சேவைகளையும் உங்களுக்கேற்றவாறு வடிவமைத்தல்.
- உங்களுக்குப் பயனளிக்கக்கூடிய உங்கள் தகவல்களை அல்லது இற்றைப்படுத்தல்களைக் காட்டுதல்.
- உங்களுக்கு அக்கறை இருக்குமென நாம் கருதும் வங்கி வசதிகள் அல்லது சேவைகளைக் காட்டுதல்.

# ஒன்லைன் விளம்பரப்படுத்தல்

நாம் ஒன்லைனில் விளம்பரங்களைச் செய்யும்போது, உங்கள் தகவல்களை எமது விளம்பரப் பங்காளிகளுடன் பகிர்ந்துகொள்ளக்கூடும்.




பின்வருவனவற்றிற்காக அத் தகவல்களைப் பயன்படுத்தும்படி நாம் எமது விளம்பரப் பங்காளிகளைக் கேட்கக்கூடும்:

- நீங்கள் அவர்களிடம் ஒரு கணக்கை வைத்துள்ளீர்களா என்பதை அறிவதற்கு.
- எந்தெந்த விளம்பரங்களை உங்களுக்கு அனுப்ப வேண்டும் என்பதைத் தெரிவுசெய்வதற்கு.
- எமது விளம்பரங்களை உங்களுக்கு அனுப்புவதற்கு.
- விளம்பரங்களிலிருந்து உங்களை விலக்கிவைப்பதற்கு, உதா: அந்த விளம்பரம் நீங்கள் ஏற்னேவே பயன்படுத்தும் சேவைக்கானதாக இருந்தால்.
- உங்களைப் போன்ற சுயவிபரங்கள் கொண்டவர்களுக்கு விளம்பரம் செய்வதற்கு அல்லது உங்களுக்கு அக்கறையுள்ள விடயங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு.
- உங்களுக்கு அக்கறை இருக்கக்கூடிய வேறு சந்தைப்படுத்தல்களை இனங்காண்பதற்கு.
- எமது சந்தைப்படுத்தல் எவ்வளவு பயனுள்ளது என்பதையும் அதனை எப்படி முன்னேற்ற முடியும் என்பதையும் புரிந்துகொள்வதற்கு.

# சமூக ஊடகம்


HSBC பின்வரும் தேவைகளுக்குச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றது:

- உங்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு.
- எமது வங்கி வசதிகள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கு.
- சில சமயங்களில் இதற்காக உங்கள் தரவுகள் பயன்படுத்தப்படலாம்.
- நீங்கள் பெற விரும்பும் விளம்பரங்கள் எவையெனத் தெரிவுசெய்வதற்குச் சமூக ஊடகத் தளங்கள் இடமளிக்கக்கூடும்.




# முகநூல்

நீங்கள் முகநூலில் HSBC பக்கம் ஒன்றைப் பயன்படுத்தும்போது, உங்களைப் பற்றிய தகவல்களை Facebook Sri Lanka சேகரிக்கும். அத் தகவல்களுள் பின்வருவன உள்ளடங்கும்:




நீங்கள் கிளிக் செய்வது: நீங்கள் மெஸெஞ்சர் உரையாடல் ஒன்றைத் தொடங்கியிருந்தால்.




நீங்கள் பார்ப்பது: நீங்கள் ஓர் இணைப்பின் மேல் நிற்கும்போது அல்லது நிகழ்ச்சிப் பக்கம் ஒன்று திரையில் இருக்கும்போது

நீங்கள் கூறுவது: கருத்துகள் அல்லது எதிர்வினைகள் போன்றவை.

உங்கள் செயல்கள்: பகிர்தல் அல்லது பரிந்துரைத்தல் போன்றவை.



உங்கள் செயல்கள்: நீங்கள் பக்கங்களில் செலவிட்ட நேரம், செயல்கள் இடம்பெற்ற திகதி மற்றும் நேரம் அல்லது நீங்கள் செயலைப் புரிவதற்கு முன் பிரவேசித்த வலைத்தளங்கள்.

உங்கள் அமைவிடம்: நாடு அல்லது பிராந்தியம். நீங்கள் உங்களுடைய சுயவிபரங்களில் இத் தகவலை வழங்கியிருந்தாலன்றி மற்றும் வலைத்தளத்தில் பிரவேசித்திருந்தாலன்றி, இது நீங்கள் இருக்கும் குறிப்பான இடம் அல்ல.


உங்கள் சாதனம் மற்றும் இணைய இணைப்பு

உங்கள் முகநூல் சுயவிபரங்கள் மற்றும் பயனர் ID

|PUBLIC|

அறிக்கையிடல். உள்ளறிவு விளக்கம் மற்றும் சந்தைப்படுத்தலுக்குப் பயன்படுத்துவதற்காக, HSBC இத் தகவல்களை அணுகும்.. முகநூலும் அவ்வாறே செய்கின்றது. முகநூலில் எமது சேவைகளின் வழங்குதலை முன்னேற்றுவதற்கும் சிறந்த சந்தைப்படுத்துலை உருவாக்குவதற்கும் இது HSBC க்கு உதவுகின்றது.

எமது சந்தைப்படுத்தலுக்கு உதவக்கூடிய குக்கீஸ்களைப் பயன்படுத்த நீங்கள் எமக்கு இடமளித்தால், HSBC இன் வலைத்தளத்தை நீங்கள் பயன்படுத்தும்போதும் HSBC மற்றும் முகநூல் இத் தகவல்களைச் சேகரிக்க முடியும். இது பற்றி மேலும் அறிய அல்லது இதனை நீக்கிவிட, என்ற வலைத்தளத்திலுள்ள எமது குக்கீஸ் அறிவித்தலில் பிரவேசிக்கவும். “Manage Cookies” என்பதைத் தெரிவு செய்வதன் மூலம் எந்தெந்த குக்கீஸ்களுக்கு நீங்கள் இடமளிக்கின்றீர்கள் என்பதை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.



# முகநூல்

நாம் உங்களைப் பற்றிய தகவல்களை எங்கிருந்து சேகரிக்கின்றோம் என்பதைப் பரிசீலிக்க, Facebook Sri Lanka எம்முடன் சட்டபூர்வமாக இணைந்துள்ள ஓர் “இணைக் கட்டுப்பாட்டாளர்” ஆகும்.

- எமது முகநூல் பக்கத்திலான உங்கள் செயற்பாடுகளிலிருந்து
- எமது வலைத்தளத்திலுள்ள Facebook pixel ஊடாக

பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கு சில பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ள நாமும் முகநூலும் இணங்கியுள்ளோம்:

- கூட்டான செயற்படுத்தலை மேற்கொள்ள இருதரப்பினருக்கும் சட்ட அடிப்படை இருப்பதை உறுதிசெய்தல்.
- உங்கள் தரவுகள் தொடர்பில் உங்கள் சட்டபூர்வ உரிமைகளுக்கு மதிப்பளித்தல்.
- கூட்டான செயற்படுத்தலின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.

நாம் இதனை எவ்வாறு செய்கின்றோம் என்பதை அறிய, நீங்கள் HSBC உடன் தொடர்புகொள்ள முடியும். முகநூல் செய்வதை அறிய, அதனுடன் தொடர்புகொள்ளலாம். முகநூலினால் சேகரிக்கப்பட்டு வைத்திருக்கப்படும் தரவுகள் தொடர்பிலான உங்கள் சட்டபூர்வ உரிமைகளும் இச் செயன்முறையில் உள்ளடங்கும்.

முகநூல் உங்கள் தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு செயற்படுத்துகின்றது, அது தங்கியிருக்கும் சட்ட அடிப்படை, உங்கள் உரிமைகள், முகநூலின் தொடர்பு விபரங்கள் என்பவற்றை விரிவாக அறிந்துகொள்ள பிரவேசியுங்கள்:


https://www.facebook.com/about/privacy

# உங்கள் உரிமைகள்

உங்கள் தகவல்களை நாம் பயன்படுத்தும் முறை குறித்து நாம் கவனமாகச் சிந்திக்கின்றோம். உங்களுக்கு மிகவும் நியாயமான முறையிலேயே நாம் எப்போதும் அவற்றைப் பயன்படுத்துகின்றோம். சில நோக்கங்களுக்காக நாம் அவற்றைப் பயன்படுத்துவதை நீங்கள் விரும்பாமலிருக்கலாம்.

பின்வருவனவற்றிற்கான சட்டபூர்வ உரிமை உங்களுக்கு உண்டு:

- உங்கள் தனிப்பட்ட தகவல்களின் பிரதிகளை வழங்கும்படி, திருத்தங்களைச் செய்யும்படி அல்லது சில சமயங்களில் தகவல்களை நீக்கும்படி எம்மிடம் கேட்பதற்கு.
- சில சூழ்நிலைகளில் உங்கள் தகவல்கள் எம்மால் செயற்படுத்தப்படுவதை ஆட்சேபிப்பதற்கு. உதாரணமாக, ஒன்லைன் விளம்பரத்திற்காக உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம் என்று கேட்பதற்கு.
- customersolutions@hsbc.com.lk க்கு முறைப்பாடு செய்வதற்கு.




உங்கள் தகவல்கள் செயற்படுத்தப்படுவதை நிறுத்த சில சந்தர்ப்பங்களில் எமக்கு முடியாதிருக்கலாம். உதாரணம்: உங்களின் அல்லது மற்றவர்களின் பாதுகாப்பிற்கு உதவுவதற்காக நாம் அவற்றைப் பயன்படுத்தும்போது.

# ஏனைய முக்கிய தகவல்கள்

நாம் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய மேலும் சில விடயங்கள் உள்ளன:

- இடமாற்றங்கள்: நாம் உங்கள் தகவல்களை ஆசிய பொருளாதாரப் பிரதேசத்திற்கு வெளியிலும் இடமாற்றம் செய்கின்றோம். அவ்வாறு செய்யப்படும்போது உங்கள் தகவல்களுக்கு அதே அளவிலான பாதுகாப்பு கிடைக்காமற்போகலாம்.
- பாதுகாப்பு: உங்கள் தகவல்களைப் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் வைத்திருப்பதற்கு மறைகுறியாக்கம் போன்ற பல்வேறு வழிமுறைகளை நாம் பயன்படுத்துகின்றோம்.
- களஞ்சியப்படுத்தல்: நாம் உங்கள் தகவல்களை எமது தரவு களஞ்சியப்படுத்தல் கொள்கைக்கு அமைவாகவே வைத்திருக்கின்றோம். சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு இணங்கியொழுகும் முகமாகவும் எமது சட்டபூர்வ நோக்கங்களுக்காகவுமே நாம் அவ்வாறு செய்கின்றோம்.




எமது முழுமையான தனியுரிமை அறிவித்தல் இந்த விடயங்கள் பற்றிய விரிவான தகவல்களைக் கொண்டுள்ளன.

# எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

உங்களுக்குச் செவிமடுக்க நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றோம்.

நீங்கள் எமது தரவுகள் பாதுகாப்பு அலுவலருடன் பின்வரும் வழியில் தொடர்புகொள்ளலாம்:




இத் தனியுரிமை அறிவித்தல் காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்தப்படலாம். மிகச் சமீபத்திய வாசகத்தை நீங்கள் இந்த வலைத்தளத்தில் பார்க்கலாம்.

கடைசியாக இற்றைப்படுத்தப்பட்டது: (திகதி)

|PUBLIC|

இத் தனியுரிமை அறிவித்தலை வாசித்தமைக்கு நன்றி.

வலைத்தளத்தில் மகிழ்ச்சியாக உலாவுங்கள்!



|PUBLIC|